பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
**11 03 2026 Wednesday 12 40 PM**

ஆகாஷவாணி
**(Tune)**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி தமிழகம் மற்றும் கேரளத்தில் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.
2. உலகிலேயே மிக குறைந்த கட்டணத்தில் இணையதள சேவை இந்தியாவில் வழங்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
3. ரயில்வே பாதுகாப்புக்கான **Kavach** திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.
4. ஈரானுக்கு எதிரான போரில் தொடர்ந்து வெற்றி பெற்று வருவதாக அமெரிக்க அமைச்சர் திரு. **Pete Hegseth** தெரிவித்துள்ளார்.
5. உலகக் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியின் தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று **Wales** அணியை எதிர்கொள்கிறது.

---இனி விரிவான செய்திகள்...

<<<< >>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமிழகம் மற்றும் கேரளத்தில் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

திருச்சி மாவட்டம் பஞ்சப்பூரில் இன்று மாலை நடைபெறும் விழாவில் பிரதமர் **5** ஆயிரத்து **650** கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி முடிவுற்ற பணிகளை தொடங்கி வைக்கிறார்.

நீலகிரி, ஈரோடு மாவட்டங்களில் **3** ஆயிரத்து **680** கோடி ரூபாய் மதிப்பிட்டில் மேற்கொள்ளப்படவுள்ள எரிவாயு இணைப்பு திட்டத்துக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

சென்னை மணலியில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மசகு எண்ணெய் கலவை ஆலையை அவர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், பல்வேறு கிராம சாலைகளை பிரதமர் திறந்து வைக்கவுள்ளார்.

நாகர்கோவில்- **Charlapalli, Podanur- Dhanbad** இடையே அம்ரித் பாரத் விரைவு ரெயில்களை அவர் தொடங்கி வைக்கிறார்.

ராமேஸ்வரம்- மங்களூரு, திருநெல்வேலி- மங்களூரு விரைவு ரயில்களையும், மயிலாடுதுறை- திருவாரூர்- காரைக்குடி பயணிகள் ரயில் சேவையையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

பின்னர் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் அவர் உரையாற்றுகிறார்.

முன்னதாக கேரளம் மாநிலம் எர்ணாகுளத்தில் நடைபெறும் விழாவில், 5 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான கொச்சி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் Polypropylene ஆலைக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

கேரளத்தில் 4 ஆயிரத்து 790 கோடி ரூபாய் மதிப்பிட்டில் அமைக்கப்பட்டுள்ள 2 தேசிய நெடுஞ்சாலைகளை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட Shoranur, Kuttipuram, Changanassery ரயில் நிலையங்களை அவர் திறந்து வைக்கிறார்.

பாலக்காடு- பொள்ளாச்சி இடையேயான புதிய ரயில் சேவையையும் பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

<<<< >>>>

உலகிலேயே மிக குறைந்த கட்டணத்தில் இணையதள சேவை இந்தியாவில் வழங்கப்பட்டு வருவதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், உலகளவில் 1 GB-க்கு 2 புள்ளி ஐந்து ஒன்பது டாலர் கட்டணம் செலுத்தும் நிலையில், இந்தியாவில் இதற்கான கட்டணம் 25 மடங்கு குறைவாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, டிஜிட்டல் இந்தியா இயக்கத்தை செயல்படுத்தி வருவதாக கூறினார். இதன் மூலம் இணைய தள சேவைகள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்டு வருவதாக கூறினார்.

கடந்த 2014-ம் ஆம் ஆண்டு நாட்டில் 25 கோடி பேர் இணைய தள சேவையை பயன்படுத்தி வந்த நிலையில் தற்போது இது 103 கோடியாக அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

<<<< >>>>

நாட்டில் **456** கப்பல்களை கட்டுவதற்கு **19** ஆயிரத்து **748** கோடி ரூபாய் மதப்பிலான திட்டத்துக்கு கப்பல் கட்டுமான நிதியுதவி கொள்கையின் கீழ் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்தா சோனோவால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில், இதுவரை **23** கப்பல் கட்டும் தளங்களுக்கு **204** கப்பல்களை கட்டுவதற்கு **620** கோடி ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ளதாக கூறினார்.

<<<< >>>>

தமிழகத்தின் தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் பல்வேறு விரிவாக்கப் பணிகளுக்காக **258** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்தா சோனோவால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், மும்பை துறைமுக விரிவாக்கப் பணிகளுக்காக **212** கோடி ரூபாயும், **Mazgaon** மீன்பிடி துறைமுக விரிவாக்கத்துக்கு **136**கோடி ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ள தெரிவித்தார்.

<<<< >>>>

ரயில்வே பாதுகாப்புக்கான **Kavach** திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வின் வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு பதிலளித்த அவர், **8** ஆயிரத்து **570** கிலோ மீட்டர் தூரத்தில் கண்ணாடி இழை கேபிள்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஆயிரத்து நூறு தொலை தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர் **767** தரவு மையங்கள் ரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

<<<< >>>>

**Madagascar** நாட்டுக்கு நிவாரண பொருட்களை அனுப்பியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துளளது.

இதுதொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. **Randhir Jaiswal** வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்திய விமானப்படையின் விமானம் மூலம் **12** டன் மருந்துகளும், **18** டன் பேரிடர் நிவாரண பொருட்களும் **Madagascar-**ன் **Antananarivo** நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இந்த நிவாரணப் பொருட்களில் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், கூடாரங்கள், தண்ணீர் தொட்டிகள், உணவுப் பொருட்கள் அடங்கும் என்று அவர் கூறியுள்ளார்.

<<<< >>>>

ஈரானுக்கு எதிரான போரில் அமெரிக்கா தொடர்ந்து வெற்றி பெற்று வருவதாக அமெரிக்க அமைச்சர் திரு. **Pete Hegseth** தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஈரானுக்கு எதிரான போர் தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு. **Donald Trump**-தான் இறுதி முடிவு எடுப்பார் என்று கூறினார்.

ஈரானின் ஏவுகணைத் திறனை முடிவுக்கு கொண்டு வருவது, அந்நாட்டின் கடற்படையை அழிப்பது, ஈரானில் அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்வதை தடுப்பது உள்ளிட்ட மூன்று இலக்குகளுடன் இந்தப் போர் தொடங்கப்பட்டதாக தெரிவித்தார்.

ஈரானை முழுமையாக தோற்கடிக்கும் வரை இந்தப் போர் தொடர்ந்து நடத்தப்படும் என்று அவர் கூறினார்.

இதனிடையே அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதலை எதிர்கொண்டு வருவதாக ஈரான் நாட்டுத் தலைவர்கள் கூறி வருகின்றனர்.

அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்வதற்கான திட்டம் எதுவும் இல்லை என்றும் அமைதியான முறையில் மட்டும் அணு சக்தியை பயன்படுத்தி வருவதாகவும் ஈரான் கூறியுள்ளது.

<<<< >>>>

அமெரிக்க தாக்குதலில் இலங்கை அருகே ஈரானின் போர்க்கப்பல் **IRIS Dena-** மூழ்கியதில் உயிரிழந்த மாலுமிகளுக்கு ஈரான் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. **Esmaeil Baqaei** அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அமெரிக்காவின் நடவடிக்கை, போர்க்குற்றம் என்றும் சர்வதேச விதிமீறல் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்திய கடற்படையின் அழைப்பை ஏற்று **IRIS Dena** போர்க்கப்பல் இந்திய துறைமுகத்திற்கு சென்று பின் திரும்பும்போது அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் தாக்குதல் நடத்தியதாக கூறினார்.

அந்த போர்க்கப்பலில் பயணித்த மாலுமிகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா தடுத்து நிறுத்தியதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது ஐ.நா.வின் போர் சட்டங்களை மீறும் செயல் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<< >>>>

மேற்காசிய பகுதியில் போர் பதற்றம் நிலவுவதால் **Hormuz** நீரிணையில் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டால் உலக வர்த்தகத்தையே பாதிக்கக்கூடும் என்று ஐ.நா. எச்சரித்துள்ளது.

ஐ.நா. வர்த்தக மேம்பாட்டு அமைப்பு வெளியிட்டுள்ள அறிகையில், இதன் மூலம் உணவுப்பொருட்களின் விலை அதிகரித்து வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று கூறியுள்ளது.

**Hormuz** நீரிணை மூடப்பட்டால் உலகளவில் கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு மற்றும் உரங்களின் வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<< >>>>

உலகக் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியின் தகுதி சுற்று போட்டியில் தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று **Wales** அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாத்தில் இப்போட்டி இரவு மணி **7.30**க்கு தொடங்குகிறது.

-------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் இந்தியன் **Wells** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி சுவீடனின் **Andre Goransson** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை **6-4, 6-4** என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் **Sander Arends-** செக் குடியரசின் **Jiri lehecka** இணையை வென்றது.

**-------**

கொல்கத்தாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத், **Shanker Heisnam** ஆகியோர் கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<< END >>>>